# இந்தியத் துணைத் தூதரகம்

## யாழ்ப்பாணம்

***

## ஊடக அறிக்கை

யாழ். இந்திய துணைத் தூதரகமானது, சர்தார் வல்லபாய் படேலின் 146 வது பிறந்தநாள், மற்றும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டு நாளை முன்னிட்டு "ஆசாதிகா அம்ரித்ம ஹோற்சவ்" கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, இன்று மாலை (அக்டோபர் 29, 2021) "சர்தார் படேலின் வாழ்க்கை மற்றும் பணிகள்" குறித்த புகைப்படக் கண்காட்சியை ஏற்பாடு செய்தது.

2. இக்கண்காட்சியை இந்தியத் துணைத் தூதுவர் ஶ்ரீமான் ராகேஷ் நட்ராஜ் மற்றும் கௌரவ வடமாகாண சபையின் அவைத் தலைவர் திரு. சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், (கலாச்சாரம்) துணைத் தூதரக அதிகாரிகள்,நூலகத்தின் அலுவலர்கள் மற்றும் யாழ் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் என பலர் கோவிட்-19 வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

3. "ஆசாதிகா அம்ரித்ம ஹோற்சவ்" கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக யாழ் இந்திய துணைத் தூதரகம் வடமாகாண சபையின் கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே இந்தியாவின் சுதந்திரம் தொடர்பான வினாடி வினா போட்டியை 28 அக்டோபர் 2021 அன்று நடத்தியது. இன்றைய நிகழ்வின் ஒரு பகுதியாக மேற்படி போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இந்திய துணைத் தூதுவர், வடமாகாண சபையின் அவைத் தலைவர் மற்றும் பணிப்பாளர் ஆகியோர் இணைந்து பண பரிசில்களை வழங்கி வைத்தனர். கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்ட வெற்றியாளர்கள்:

| பரிசு | பெயர் | பாடசாலை | தரம் |
|---|---|---|---|
| முதலாம் பரிசு | ரூபிகா அருந்தவம் | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | 7 |
| இரண்டாம் பரிசு | மதுரா அருந்தவம் | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | 12 |
| மூன்றாம் பரிசு | கோபினா சுதாகர் | யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி | 08 |
| | சுதாகர் திரோஷன் | யாழ்.பரியோவான் கல்லூரி | 10 |

4. நிகழ்வுகளின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

***

29 ஒக்ரோபர் 2021
யாழ்ப்பாணம்